DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**Case No: CC.No. 387/2022**

Deposition of witness for Prosecution அ.சா.1

Name : சிவஞானம்
Father/ Husband Name : ராமசாமி
Village :
Taluk :
Calling :
Age :

எதிரிகள் ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 23.09.2025.

**முதல்விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

1. நான் தற்போது இறகுச்சேரியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். எதிரிகளை தெரியும். எதிரிகள் வீட்டு வாசலில் வந்து மலம் கழித்துவிட்டு சென்று விடுவார்கள். கடந்த 11.01.2016-ம் தேதி நான் வீடு கட்டுவதற்காக செங்கல், மணல் ஆகியவற்றை எடுத்துவந்து வைத்திருந்தேன். அவற்றை எதிரிகள் திருடிவிட்டார்கள். அதை போய் கேட்டேன். அதற்கு எதிரிகள் தேவிடியா பயலே என்று அசிங்கமாக பேசி உன்னை கொன்றுவிடுவேன் என்று மிரட்டினார்கள். என் மனைவியை பார்த்து தாலி அறுக்கச் செய்துவிடுவேன் என்று கூறி மிரட்டினார்கள். தற்போதுவரை தொடர்ந்து அவர்கள் இவ்வாறு செய்து கொண்டிருக்கிறார்கள். அதனால் நான், என் மனைவி மற்றும் ஊர்க்காரர்களுடன் சென்று புகார் கொடுத்தோம். என்னிடம் காண்பிக்கப்படும் புகாரில் உள்ள 1 வது கையெழுத்து என்னுடையது தான். **(மேற்படி புகார் அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. எதிரிகள் எனக்கு பங்காளிகள் தான். எனக்கும் எதிரிகளுக்கும் சொத்து சம்பந்தமாக முன்விரோதம் உள்ளது என்றால் இல்லை. ஊரிலுள்ள அனைவரிடமும் அசிங்கமாக பேசி வீண்வம்பு செய்வார்கள் என்று

சொல்வது குறித்து எதிரிகள் மீது எந்த வழக்கும் இல்லை என்றால் ஆமாம். நான் எந்த வருடம் வீடு கட்டினேன் என்றால் 11.01.2016-ல். மணல், செங்கல் ஆகியவற்றை எந்த தேதியில் எப்பொழுது திருடினார்கள் என்று புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. உண்மையிலேயே திருடியிருந்தால் எவ்வளவு இழப்பு ஏற்பட்டது என்று புகாரில் சொல்லியிருப்பேன் என்றும் நான் சொல்வது போல் எந்த பொருளும் திருடப்படவில்லை என்றால் சரியல்ல.

2. என்னை எப்போது அசிங்கமாக பேசினார்கள் என்று புகாரில், போலீஸ் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால சரியல்ல, 11.01.2016ல் பேசினார்கள். நான் சொல்வது போல் தங்கவேலு, சுப்புராயன், தேன்மொழி, ஜோதிலெட்சுமி ஆகியோர் எதிரிகள் மீது எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல, அவர்களும் காவல் நிலையம் வந்தார்கள். கார்த்திகா என் மனைவி. தங்கவேலு, சுப்புராயன், தேன்மொழி, ஜோதிலெட்சுமி, வாசுகி ஆகியோர் எனது உறவினர்கள் என்றால் இல்லை, அக்கம்பக்கத்தில் உள்ளவர்கள். எனக்கும் எதிரிகளுக்கும் உள்ள முன்விரோத்ததின் காரணமாக பொய்யாக புகார் கொடுத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை.

S/d.D. பூர்ணிமா.,B.A.B.L. (Hons.) LL.M.,
நீதித்துறை நடுவர்,
தேவகோட்டை.